# சங்ககாலப் பெண் கவிஞர்களின் கவிதைகளால் அறியப்படும் சமூக விழுமியங்கள்

முனைவர் அ. டெல்பின்
உதவிப் பேராசிரியர்,
திருச்சிலுவை கல்லூரி, நாகர்கோவில்.

**ஆய்வுச் சுருக்கம்**

வள்ளவர் குறிப்பிடும் 'விழுப்பம்' என்னும் சொல்லும் 'சீர்மை' என்னும் பொருளுடையது. சங்ககாலப் பெண் கவிஞர்களின் கவிதைகளால் அறியப்படும் சமூக விழுமியங்களையும் அவை மனித வாழ்வில் பின்பற்றத்தக்க நெறிகளுள் சீர்மையுடையனவாக காணப்படுவதை இக்கட்டுரையில் காணலாம்.

சங்கப் பெண் புலவர் பாடல்களாலும் ஏனைய பாடல்களாலும் அறியப் பெற்ற சிறந்த விழுமியங்கள்: மானம் பெரிது என்ற விழுமியம், ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாடு, பெண்ணைக் கொல்லக் கூடாது என்பது மனித விழுமியம், பெண்ணுக்கு அச்சம் மடம் நாணம் இருக்க வேண்டும் என்ற நெறி.். விழுமியம், பெண் மடல் ஏறல் கூடாது, கடமை, ஒழுக்கம், நட்பு, கற்பு என்ற விழுமியம், உண்மை பேசுதல் என்ற கோட்பாடு.

அக இலக்கியம் காட்டும் பெண்ணிலிருந்து புறப்பாடல்கள் சித்திரிக்கும் பெண் முழுக்க மாறுபட்டு விளங்குகிறாள். பெண்ணின் தனித்து இயங்கும் ஆற்றல் மறுக்கப்பட்டு, ஆணை மையமிட்டதாக மாறும் நிலையில் பெண்ணுக்கெனத் தனித்த அடையாளம் எதுவுமில்லை என்ற போதிலும் சமூக விழுமியங்கள் அவை சார்ந்த மதிப்பீடுகள் பெண் புலவர்களின் பார்வையில் ஒரு நேர்கோட்டில் பயணிப்பதை பெண் கவிஞர்களின் பாடல்களின் வழி அறிந்து கொள்ள முடிகிறது. அவை சமூகத்தின் விழுமியங்களைக் கட்டமைப்பதாக விளங்குவதையும் அழுத்தமாக இக்கட்டுரையின் மூலம் கண்டுணரலாம்.

**திறவுச்சொற்கள்**

சமூக விழுமியம் - மனித விழுமியம் - வாழ்வின் விழுமியம் - மடல் ஏறல் - ஒழுக்கம் - கற்பு விழுமியம்

**முகவுரை**

பண்பாட்டைச் சேர்ந்தோர் தம் வாழ்க்கைக்கும் செயல்முறைக்கும் தொடர்புடையதான விழுமியங்களைக் கொண்டு ஒழுகுவர். தவிர்க்க வேண்டியவற்றை நீக்குவர். அவை தம் பண்பாட்டு விழுமியங்களோடு கலந்து விடாது பார்த்துக் கொள்வர். தனிமனித விழுமியம் என்றில்லாமல் தனித்த ஒரு சமூக விழுமியம் என்று காத்துக் கொள்வர். விழுமியம் எனும் சொல் சங்க இலக்கியங்களுள் இடம்பெறவில்லை. 'விழுமிய' எனும் சொல் சங்க இலக்கியங்களுள் காணப்படுகின்றது. இச்சொல்லுக்கு சிறந்த - (சென்னைப் பல்கலைக்கழகக் கழகத் தமிழ்ப் பேரகராதி) செழித்த, வளமான, உயர்ந்த என அகராதிகள் பொருள் தருகின்றன. பத்துப்பாட்டில் இடம் பெறும் 'விழுமிய' என்னும் சொல்லுக்கு நச்சினார்க்கினியர் 'சீரிய' எனப் பொருள் கொள்கிறார். வள்ளவர் குறிப்பிடும் 'விழுப்பம்' என்னும் சொல்லும் 'சீர்மை' என்னும் பொருளுடையது. சங்ககாலப் பெண் கவிஞர்களின் கவிதைகளால் அறியப்படும் சமூக விழுமியங்களையும் அவை மனித வாழ்வில் பின்பற்றத்தக்க நெறிகளுள் சீர்மையுடையனவாக காணப்படுவதை இக்கட்டுரையில் காணலாம்.

**மானம் பெரிது என்ற விழுமியம்**

வெண்ணிக் குயத்தியார் என்ற புலவர் சேர மன்னனின் மானத்தைப் பெரிதாகப்

சிறப்பிதழ்
**Special Issue**

03 ஐப்பசி 2052
20th October 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S. Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

சிறப்பிதழ் : **பன்னாட்டுக் கருத்தரங்கம்-2021**
**தமிழ்த்துறை**
**அவினாசிலிங்கம் மனையியல் மற்றும்**
**மகளிர் உயர்கல்விநிறுவனம்,**
கோயம்புத்தூர்-641 043, தமிழ்நாடு, இந்தியா

# இலக்கியங்களில் பெண்களின் ஆளுமை

சிறப்பிதழ் ஆசிரியர்கள்

**Special Issues Editors**

**முனைவர் மு. கவிதா**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
**முனைவர் பொ. ராணி**
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

*Published by*
**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

34 பகுதி-4
Part -4